## வெற்றிகரமானதொரு அடிப்படைத் தொழிற் கல்வியில் சேர்ந்து கொள்வதற்கு முக்கிய முன்நிபந்தனைகளாக உள்ளவை:

- டொச் தராதரம் B1, தொழில் துறைக்கேற்ப B2 (Telc- பரீட்சைகளில் வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் சித்தி பெற்றிருத்தல்)
- சிறந்த கணித அறிவு
- சுயமாகக் கற்றலும் மற்றும் கற்றல் உபாயங்களும்
- தொழிற்கல்வியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதற்கு, ஆர்வம் கொண்டிருத்தல்
- தனிப்பட்ட ரீதியாகவும் மொழி ரீதியாகவும் தானாகவே முன்னேறுவதற்கு ஆயத்தமாக இருத்தல்
- 100% ஈடுபட தயார்நிலையிலிருத்தல் (பகுதிநேரம் சாத்தியமற்றது)
- தொழிற் கல்வியை பாதிக்கக் கூடிய அல்லது சாத்தியமற்றதாக்கக் கூடியதான உடல் நலக் குறைபாடுகள் எதுவும் இல்லாதிருத்தல்
- 2-4 வருடகாலத்திற்கு தன்னைக் கட்டாயமாக கடமையிலீடுபடுத்துவதற்கு தயாராக வைத்திருப்பதுடன் இக் காலப்பது-தியில் சமூக பராமரிப்புச் சலுகைகளில் வாழ்வதற்கும் தயாராக இருத்தல்.
  (தொழிற்கல்வி கற்பவர்களது ஊதியம் வாழ்க்கைச் செலவுகளுக்கு போதுமானதல்ல)

**EBA** அல்லது **EFZ** அடிப்படைத் தொழிற் கல்வியை மேற்கொள்வதற்கு பாடசாலையிலும் மொழியறிவிலும் நன்கு தேறிய-ிருந்தால் மட்டுமே சாத்தியமாகும் என்பது நிபந்தனையாகும், அத்துடன் அதீத ஆர்வமும் தொழில் நிலையமொன்றின் அனுமதிக்கான ஒப்புதலும் அவசியமாகும்.

அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மற்றும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ள நபர்கள் தொழிலில் முன்றேுவதற்கான ஊக்குவிப்புத் திட்டம்.

# அடிப்படைத் தொழிற் கல்வி



Fachstelle Integration Graubünden
Post spezialisà per l'integraziun dal Grischun
Servizio specializzato per l'integrazione dei Grigioni



**Tamil**

Grabenstrasse 1
7001 Chur

081 257 26 38

www.hallo.gr.ch
www.fluechtlinge.gr.ch



# அடிப்படைத் தொழிற் கல்வி

## நோக்கம்

- ஒரு தொழிலைச் செய்வற்காகத் தகமைபெறல
- தொழிலில் நீண்டகாலம் ஒத்துழைத்து முன்னேறுவதுடன் தொழில்- மற்றும் தொடர்ந்து கற்கும் சந்தர்ப்பங்களுக்கான அனுமதி
- நிதி ரீதியாகத் தன்னிறைவு பெற்றிருத்தல்

படிப்படியாக அடிப்படைத் தொழிற்கல்விக்கு செல்வதுடன் வேலைத் தலமொன்றையும் தேடிக்கொள்ளல்.




## அடிப்படைத் தொழிற் கல்வி ஒன்றின் மூலமாக பெற்றுக்கொள்ளக் கூடிய இரு வகையான இறுதிச் சான்றிதழ்கள் உள்ளன:

> 2- வருடகால அடிப்படைத் தொழிற்கல்வி மூலமாகக் கிடைக்கும் சுவிஸ் கூட்டாட்சி அரசின் தொழில் அத்தாட்சிப் பத்திரம (EBA)

- பாடசாலைக்குத் தேவையான சாதாரண அறிவுடன் தொழில் ரீதியான தகமைகளை கற்றுக் கொடுத்தல்
- ஏறத்தாழ 60 EBA- தொழில்களை கற்றுத் தேற முடியும்
- சிறப்பான திறமைகளின் பொழுது குறுகிய கால EFZ தொழிற்கல்வி ஒன்றுக்குமாறமுடியும்.
- தொழில் வாழ்வில் இறங்கி கற்ற தொழிலை செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெறல்.

> 3- அல்லது 4- வருடகால அடிப்படைத் தொழிற்கல்வி மூலமாக வழங்கப்படும் சுவிஸ் கூட்டாட்சி அரசின் ஆற்றலுடன் கூடிய செயற்திறன் சான்றிதழ (EFZ)

- குறிப்பிட்ட தொழிலைச் செய்வதற்கான திறனைக் கொண்டிருப்பதுடன் பரந்துபட்ட ஆற்றலையும் தகுதியையும் கற்றுக் கொள்ளல
- ஏறத்தாழ 180 EFZ- தொழில்களை கற்றுத் தேற முடியும்
- உயர் தொழிற்கல்வி ஒன்றுக்கு கதவு திறக்கின்றது

அடிப்படைத் தொழிற்கல்வி பின்வரும் கற்கைநெ-றிப் பகுதிகளை உள்ளடக்குகின்றது:

| | |
|---|---|
| தொழில் பயிற்றுவிக்கும் நிலையம்<br>தொழில் பயிற்சி<br>3-4 நாட்கள் / வாரம் | மொழித் திறனை விரிவு-படுத்துதலும் அதனை ஆழமாக்குதலும<br><br>டொச் தராதரம் B2 தொடக்கம் C1 வரை வசனங்களடங்கிய பந்திகளை புரிந்துகொள்ளல் / வசன அமைப்பு / இலக்கணமும் பிழையின்றி எழுதுதலும் |
| தொழில் துறைசார் பாடசாலை<br>தொழில்- மற்றும் துறைசார் கற்கை நெறிகள்<br>கணிதம்<br>பொது அறிவுக் கல்வி மற்றும் சமூகக் கல்வி<br>மொழி மற்றும் கலந்துரையாடல்<br>1-2 நாள் / வாரம் | |
| தொழில் நிறுவனத்திற்கு வெ-ளியேயான கற்கை நெறிகள் (ÜK)<br>தொழில்ரீதியான அடிப்படைகளும் நிறைவுசெய்யும் திறன்களும் | |

தொழிற்கல்வியானது செயல்முறை மற்றும் கற்கைநெறியில் தகமை பெறுவதுடன் நிறைவுபெறும் (இறுதிப் பரீட்சை) தொழிற்கல்வியானது செயல்முறை மற்றும் கற்கைநெறி தொடர்பாக தகமை பெறும் நடைமுறையுடன் நிறைவு பெறுகின்றது.